# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අති විශෙෂ   அதிவிசேஷமானது**

අංක 1654/22 - 2010 මැයි 20 වැනි බ්‍රහස්පතින්දා - 2010.05.20

***1654/22 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆந் திகதி வியாழக்கிழமை***

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: 4/4/1-1/754/9.
காணி அமைச்சின் குறிப்பு இல.: எல்டி/05/2008/எப்எச்/338.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில், பேருவளை பிரதேச செயலாளர் பிரிவில், 754 மருதான கிராம சேவகர் பிரிவில், நிலஅளவையாளர் நாயகத்தின் இல. க 4239 எனும் வரைபடத்தில் விஸ்தீரணம் 0.0307 ஹெக்டயார் கொண்ட காணி இலக்கம் 01 இன் விபரம் :

**துண்டு இல. 01**

காணியின் பெயர் : கொடகஹவத்த அல்லது எடம்பகஹவத்த ; விபரம் : மருதான மீன்கள் ஏலவிற்பனை செய்யும் இடத்திற்காக காணி சுவீகரித்தல் ; உரிமை கோருபவர் : 1. ஏ. எஸ். எம். மன்சூர், வெத்திம ராஜபுர, மருதான, பேருவளை 2. எஸ். ஏ. எம். கலீல், இல. 155/9சீ, அபூபக்கர் ஹாஜியார் மாவத்த, மருதான, பேருவளை; விஸ்தீரணம் : 0.0307 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2010 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 26 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு பேருவளை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2010ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 19 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

விமல் குணதுங்க,
பிரதேச செயலாளர்,
பேருவளை.

பிரதேச செயலகம்,
பேருவளை,
2010.05.13.

06 - 98

---

திருத்தம்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2009.05.11 ஆந் திகதிய இலக்கம் 1601/1 அதிவிஷேட வர்த்தமானியில் வெளியான காணி எடுத்தல் சட்டத்தின்படி எனது அறிவித்தல்.

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், உடதும்பர பிரதேச செயலாளரின் பிரிவில் ஹுன்னஸ்கிரிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள "நுககலவத்த" எனும் பெயருடைய நில அளவை நாயகத்தின் இல. 429 ஆம் இ.கி.வரைபடத்தில், 14 ஆம் இலக்கத் தாளில், மேலதிகம் 14 ஆம் இலக்கப் பகுதியில், தொகுதி இலக்கம் 210, விஸ்தீரணத்தில் 5.0159 ஹெக்டயார்ஸ், தொகுதி இல. 211 விஸ்தீரணத்தில் 0.0185 ஹெக்டயார், மற்றும் தொகுதி இல. 212 விஸ்தீரணத்தில் 0.1676 ஹெக்டயார் ஆகிய முழு விஸ்தீரணத்தில் 5.1920 ஹெக்டயார்ஸ் உள்ள காணி என திருத்தப்பட வேண்டும் என்று இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.

டபிள்யு. எம். எம். ஜீ. அபேசிங்ஹ பண்டா,
பிரதேச செயலாளர்,
உடதும்பர.

எனது இல.: உது/2/2/10/70.
காணி அமைச்சின் தொடர்பு இல.: 13/96/எப்ஆர்/64.
பிரதேச செயலாளர் அலுவலகம்,
உடதும்பர,
2010.05.05.

06 - 97

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.